பக்கங்கள் 6 விலை சதம 40 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 10 பங்குனி 14 ரபி அவ்' 17 இதழ் 45
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-3-78

**வட இந்திய யாத்திரை**

1978 வைகாசி மாதம் நடுப்பகுதியில் போகுமிடங்கள்: காசி, காஷ்மீர், ஹரித்துவார், மதுரா, ரிஷிகேசம், டெல்கி, பம்பாய், சாரநாத், திருப்பதி, இன்னும் பல.
விபரங்கட்குத் தொடர்புகொள்ளவும்:

**சத்தியா றவல்ஸ்**
224/ஏ. கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 7677

## ஏழுவருட அரசியல் தடை!

இஸ்லாமாபாத், மார்ச் 26
பாகிஸ்தானின் முன்னாள் எம். பி. ஒருவருக்கு இன்று ஏழுவருட அரசியல் தடை விதிக்கப்பட்டது.

ஊழல்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட முன்னாள் பாகிஸ்தானிய பாராளுமன்ற உறுப்பினரான இவர்மீது நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்தே அரசியல் தடைவிதிக்கப்பட்டது. இவர், பூட்டோவின் மக்கள் கட்சி அங்கத்தவராகும். பாகிஸ்தானில், இராணுவ ஆட்சியின் கீழ் ஒருவருக்கு அரசியல் தடை விதிக்கப்பட்டது இதுவே முதற்தடவை.

# யாழ். ஆஸ்பத்திரி குறைகள் விரைவில் தீரும்!

## 5 எம்.பி.க்கள் திடீர்விஜயம்

### அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்

[யாழ்ப்பாணம்]

**யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நிலவும் பல்வேறு குறைபாடுகளையும் நேரில் கண்டறியும்பொருட்டு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் திடீர் என்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தனர்.**

நல்லூர்த் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. சிவசிதம்பரம், யாழ்ப்பாணத் தேசியபேரவை உறுப்பினர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன், உடுவில் தேசியபேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறை தேசிய பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், ஊர்காவற்றுறை தேசியபேரவை உறுப்பினர் திரு கா பொ. இரத்தினம் ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்து ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் பற்றியும் இங்கு எடுக்கவேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்தும் ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதுடன்; ஆஸ்பத்திரியின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டு இங்கு நிலவும் அவலநிலைகுறித்து அவசர நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய சகலமுயற்சிகளையும் தாங்கள் செய்வதாக வாக்களித்தனர்.

### தண்ணீர்பிரச்னை தீரும்

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத பிரச்னைகளில் ஒன்றாக இருந்துவரும் குடிதண்ணீர்ப் பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எம். பி.க்களுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் சமூகமளித்திருந்த பொறியியல் நிபுணர் இரு மாதங்களில் புதிய தாங்கி ஒன்றை அமைக்க இயலுமென்று ஆலோசனை வழங்கியுள்ளார். இதற்கிணங்க இரண்டு மாதங்களில் குடிதண்ணீர் வசதியை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எம். பி.க்கள் எடுத்துள்ளனர்.

### மேலதிக அம்புலன்ஸ்

யாழ். ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை உடன் நிவர்த்தி செய்வதற்கும் இச் சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டது.

மேலதிக அம்புலன்ஸ் வண்டிகளை அரசு மூலம் தருவிக்க உடன் நடவடிக்கை எடுக்கவும் எம். பி.க்கள் முடிவுசெய்துள்ளனர்.

### மருந்துகள் தருவிக்கப்படும்

யாழ் ஆஸ்பத்திரியில் நில

(6ம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்து; மூவர் பலி!

(கொழும்பு)
பூண்டுலோயாவுக்கருகே நேற்று நிகழ்ந்த பஸ் விபத்தில் மூவர் பலியானார்கள்! பதினேழுபேர் படுகாயமடைந்துள்ளனர். 50 பேர் சிறுகாயமடைந்துள்ளனர். பூண்டுலோயாவிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த இந்த பஸ் புறப்பட்ட சில மணி நேரத்துக்குள், பாதையை விட்டு விலகி குடைசாய்ந்து, பள்ளத்தில் வீழ்ந்தது. இருவர் ஸ்தலத்திலும் ஒருவர் ஆஸ்பத்திரியிலும் உயிரிழந்தனர்.

வெடிமருந்து

## பரிசோதகர் இல்லை; பொதுமக்கள் பாதிப்பு

(வண்ணார்பண்ணை)
யாழ் மாவட்டத்தில் வெடிமருந்து பரிசோதகர் இல்லாததால், பொதுமக்கள் தமது தேவைகளுக்கு வெடிமருந்து வகைகள் பெற முடியாது கஷ்டப்படுகின்றனர்

யாழ்ப்பாணச் செயலகத்தில் கடந்த வருடமிருந்த பரிசோதகர், கொழும்புக்கு இடமாற்றம் பெற்றதன் பின்னர் அவருக்குப் பதிலாக ஒருவரும் இப்பதவிக்கு நியமிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

கடந்தவருடம், கொழும்பில் உள்ள ஒருவரே யாழ்ப்பாணத்திற்கும் இடையிடையே வந்து கடமையாற்றியதாகவும் வெடிமருந்து விநியோகம் யாழ். மாவட்டத்தில் தடைசெய்யப்பட்டதன் பின்னர் இந்த உத்தியோகத்தரது விஜயமும் தடைப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க வேலைகளும் தனிப்பட்ட கிணறுகள் வெட்டும் வேலைகளும் யாழ். மாவட்டத்தில் வெடிவிநியோகம் இல்லாததால் தடைப்பட்டுள்ளன.

## இருபிரிவினர் மோதல்; ஆயுதப்பொலிஸார் காவல்

### இன்றுகாலை சமரச மாநாடு

(யாழ்ப்பாணம்)
நேற்று மாலை, சுமார் ஐந்து மணியளவில், நாவாந்துறைப் பகுதியில், இருபிரிவினருக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து; ஆயுதம் தரித்த பொலிஸார் இப்பகுதியை இப்பொழுது காவல் செய்கின்றனர்!

மோதலில் சம்பந்தப்பட்ட இரு பிரிவினரும், ஒருவர் பகுதிக்குள் மற்றையோர் செல்ல முடியாதபடி அவர்களது நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது.

நேற்று மாலை திடீரென இருபிரிவினருக்குமிடையே ஏற்பட்ட மோதலின்போது, பயங்கர ஆயுதங்கள் கையாளப்பட்டதாகவும், எட்டு வீடுகள் சேதப்படுத்தப்பட்டதாகவும், ஒரு வீடு எரிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. சிலர் காயமடைந்துள்ளனர்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு, பொலிஸ் கோஷ்டியை ஸ்தலத்துக்கு அனுப்பிவைத்த யாழ். பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ் ரண்முத்துக்கல நேற்றிரவு ஸ்தலத்துக்கு நேரில் விஜயம் செய்தார். உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆனந்தராஜனும ஸ்தலத்துக்குசென்று பார்த்தார்,

இவ்விஷயம் யாழ். எம். பி. திரு வெ. யோகேஸ்வரனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, அவர் உடனடியாக சமரச நடவடிக்கையை மேற்கொண்டார். மோதலில் சம்பந்தப்பட்ட இரு பிரிவினரையும் சமரச மகாநாடொன்றுக்கு அழைக்கும் ஏற்பாடுகள் உடனடியாகக் கவனிக்கப்பட்டபோதிலும், சமரசப் பேச்சுக்கள் இன்று காலை சுமார் பத்து மணிக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[6ம் பக்கம் பார்க்க]

**மகத்தான திறப்புவிழா**

இன்று (27-3-78) திங்கட்கிழமை காலை 6-15க்கு மேல்
பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்படும்:
அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நியூ சோதி ஜுவல்லர்ஸ்**
(நகை வியாபாரிகள்)
127. கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
8771

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இந்தியன் அயன்சேவ்(IRON SAFE) உடனடியாக விற்பனைக்குண்டு. விபரம்: சி. சிவப்பிரகாசம், ஞானவைரவர் வீதி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 8877

சொந்தப் பாவனையிலுள்ள A 50 1 ஸ்ரீ 2000 தொடர் இலக்கக் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. றிம் அளவு 15. இரண்டாவது உரிமையாளர். நேரில் வந்து பார்வையிடலாம். "விமல வாசா" ஆடியம்பிட்டி 'ஒழுங்கை, சாவகச்சேரி. 8874

விசுவமடு பரந்தன் முல்லைத்தீவு றோட்டு புளியடிச் சந்தியில். மிளகாய் வாழை,மற்றும் இறுபயிர்கள் செய்யக்கூடிய, நீர்ப்பாசன வசதியுடைய தோட்டநிலம் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ளவும்: V. S. நற்குணம்,569. பீச்றோட்டு, குருநகர் யாழ்ப்பாணம். 8846

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மாம்பழம் சந்தியில் 3 பரம்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு, N. U. மூர்த்தி 45, யமுனாவீதி நல்லூர். 8840

கார்,வான் ஓட்டுவதில்குறைந்தது பத்து வருட அனுபவமும், திடகாத்திரமும் உள்ள சாரதி உடன்நியமனத்திற்கு தேவை. வயது சுமார் 45 வரை இருத்தல் விரும்பத்தக்கது. எல்லாப் படிகளும் உட்பட சம்பளம் ரூ.250/-ம் வேறு சலுகைகளும் உண்டு. நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8865

ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பான "ஜனதா பீடி" சுற்றுவதற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண்பிள்ளைகள் எம்முடன் தொடர்பு கொள்க. "ராணி பவனம்" ஸ்ரீ ரஞ்சன வீதி, கிராமக்கோட்டடி, புலோலி. 8820

7½"×2½" விஸ்தீரணமான பெயர்ப்பலகை எழுதக் கூடிய பிரபல்யமான கலைஞர்கள் தேவை. விபரங்களுக்கு: விற்பனை அதிகாரி, ஸ்ரீலங்கா ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், 14—15, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். 8871

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலைபழகுபவர்களும் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும்; நேரில் வரவும். சேவிஸ் கிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 8873

### கல்வி

சிவா கல்வி நிலையம், 71, அரசடிவீதி நீராவியடி. G. C. E. (O. L) ஆவணி 78 பரீட்சை விஞ்ஞான வர்த்தக கலைவகுப்புக்கள், 1-4-78 இல் ஆரம்பிக்கவுள்ளன. 8849

## பரிசீலனை செய்ய உத்தரவு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பணிபுரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 24 ஊழியர்களின் பிரச்சினை பற்றி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

பிரஸ்தாப 24 ஊழியர்களும் தமது நிலைபற்றி ஜனாதிபதியிடம் மகஜர் மூலம் முறையிட்டு இருந்தனர். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி வேலை இழந்த இவ் ஊழியர்களின் விடயம் பற்றிப் பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுக்கும்படி உணவு கூட்டுறவுத்துறை அமைச்சரைப் பணித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஊழியர்களின் செயலாளர் திரு. எம், ஜே. ஏ. சுபேந்திரராஜனுக்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் ஜனாதிபதி இத்தகவலைத் தெரிவித்துள்ளாராம். (உ)

யாழ். மத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்
பெற்றோர்-ஆசிரியர் சங்கம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

25-3-78ல் நடைபெற்ற மேற்படி சீட்டிழுப்பு முடிவுகள்.

1-ம் பரிசு இல: 5141
2-ம் பரிசு இல: 20218
3-ம் பரிசு இல. 2393

25 ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 6870 | 24828 |
| 18876 | 22325 |
| 37177 | 29527 |
| 472 | 16898 |
| 18 | 16608 |
| 17973 | 34227 |
| 28188 | 15491 |
| 11961 | 6109 |
| 34814 | 36342 |
| 3829 | 8925 |
| 6736 | 8545 |
| 9014 | 18517 |
| 34238 | |

குறிப்பு:
29-3-78 பி.ப. மூன்று மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் தங்கள் அதிர்ஷ்டச் சீட்டை சமர்ப்பித்து தங்களுக்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளவும்.

செயலாளர்
பெ. ஆ. ச.

25-3-78. 8870

# பஸ்-கார் விபத்து இருவர் படுகாயம்

## துன்னாலையில் சம்பவம்

(நெல்லியடி)

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் நோக்கி சென்ற இ. போ. ச. பஸ் வண்டி துன்னாலை முள்ளி சந்தியில் எதிரே வந்த காரொன்றுடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

இவ்விபத்தில் கார் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. காரில் பிரயாணம் செய்த இருவர் ஆபத்தான நிலையில் மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்கள்.

காரச்சாரதியான மீசாலையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இராஜரட்ணம் சிறுகாயங்களுடன் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து குறித்து பருத்தித்துறை பொலிசாரும் இ. போ ச. அதிகாரிகளும் விசாரணை செய்து வருகின்றார்கள். (உ)

## கூட்டுறவு ஊழியருக்கு வெளிநாட்டில் பயிற்சி

(கொழும்பு)

கூட்டுறவுத்துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பயிற்சி அளிக்கப்படும்.

உணவு, கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் இத்தகவலை கேகாலையில் நடைபெற்ற கூட்டுறவு ஊழியரின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

கூட்டுறவுத்துறையை மறுசீரமைக்கும் நோக்குடனேயே இத்திட்டம் அமுல்செய்யப்பட உள்ளது என்றும் திரு. ஹேரத் கூறினர்.

## மனைவிக்கு நஞ்சூட்டிவிட்டு தலைமறைவாகிவிட்டாராம்

### கணவரைப் பொலிஸ் தேடுகிறது

(மட்டக்களப்பு)

குடும்பத்தகராறில் கணவன்-மனைவிக்கிடையே எழுந்த வாக்குவாதம் காரணமாகத் தனது மனைவியை நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் கருதப்பட்ட அப்பெண்ணின் கணவர் இரவோடிரவாக தலைமறைவானதையடுத்து பொலிசார் அவருக்கு வலை விரித்துள்ளனர்.

படுவான் கரையிலுள்ள காலையடிமடு என்ற இடத்தில் சமீபத்தில் நடைபெற்றுள்ளது மேற்படி சம்பவத்தில் நஞ்சூட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டதாகக் கருதப்படுபவர் கரையாக்கன் தீவைச் சேர்ந்த சந்தைவா லெட்சுமி (24 வயது) எனப்படும் கர்ப்பிணிப் பெண்ணவார்.

மேற்படி சம்பவம் குறித்து கன்னன்குடா கிராமசபைப் பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கிருஷ்ணபிள்ளை விசாரணை நடத்தினர். இவ் விசாரணைக்கான சாட்சியங்களை அப்பகுதி கிராம சேவை அலுவலரான திரு. கே. சொக்கலிங்கம் ஆஜர் செய்தார்.

விசாரணையின்போது சாட்சியங்கள் மூலமாகத் தெரிய வந்ததாவது:-

காலஞ்சென்ற பெண்ணின் கணவரான புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அழகிப்போடி திருமேனி [33 வயது]க்கும் காலஞ்சென்ற பெண்ணுக்குமிடையே அடிக்கடி தகராறு எழுவதுண்டாம். சம்பவதினம் அருவி வெட்டிவிட்டு வீட்டுக்கு வந்த கணவர் அப்பொழுது தமக்கும் மனைவிக்கும் எழுந்த தகராறின்போது நச்சுத் திராவகத்தை அவருக்கு பருக்கினாராம். இதைக்கண்ட அவர்களது மூத்தபிள்ளை கத்தியதாம்.

சிறிதுநேரத்தின்பின் காலஞ்சென்றவர் மயக்கமுற்று அவதியுறவே, அவர் தலைமறைவானாராம். இம் மரணம் தொடர்பாக சாட்சியமளித்த மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஏ. பொன்னுச்சாமி பெண்ணின் உடலில் நஞ்சு கலந்துள்ளதால் மரணம்சம்பவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணையின் பின் பகிரங்கத் தீர்ப்பளித்த சடுதி மரண விசாரணை அதிகாரி திரு. கிருஷ்ணபிள்ளை, காலஞ்

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய ஆலய உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மேற்கு ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோவில் மகாகண்டா (பெரிய மணி) பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக கிரியைகள் இன்று ஆரம்பமாகி நாளைய மறுதினம் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கிரியைகளையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகளாக 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை "விநாயகர் மகத்துவமும், மணியின் தத்துவமும்" என்னும் பொருள்பற்றி சைவப் புலவர் இசைமணி திரு. இ. திருநாவுக்கரசு சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

29 ந் திகதி பகல் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் கதாப்பிரசங்கமும், மாலை சின்னமணி குழுவினரின் "கர்ணனும் கர்ணனும்" என்னும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளும், பல தவில், நாதஸ்வர கச்சேரிகளும் நடைபெறும்.

0 0 0

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமிகோவில் மகாகும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுகிறது.

0 0 0

தெல்லிப்பளை - பன்னாலை வரத்தலம் கற்பகப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோலதின தவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

இவ்வைபவத்தையொட்டி மாலை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் "பிரணவ உபதேசம்" பற்றிய இன்னிசை விரிவுரை நடைபெறும். [செ]

உ

## திருமண வரவேற்புபசாரம்

அன்புடையீர்,

நிகழும் பிங்கள ஹூ பங்குனி மீ 14 உ (27-3-78)
திங்கட்கிழமை பகல் 11-26 மணி தொடக்கம்
1-02 மணி வரையுள்ள சுபவேளையில்
திரு. க. சுப்பிரமணியம் அவர்களின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை நம்பி
திருச்செகநாதன்
அவர்களுக்கும்
எமது புத்திரி
திருநிறை நங்கை
ஸ்ரீரங்கநாயகிக்கும்
செல்வச்சந்நிதித் திருத்தலத்தில் திருமணம் நிகழத்
திருவருள் கைகூடியிருப்பதால்
இவ்வைபவத்தையொட்டி
29-3-78 புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம்
நிகழவிருக்கும் வரவேற்புபசார வைபவத்தில்
தங்களனைவரையும் பங்குபற்றி
மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
உறவினர்களையும், நண்பர்களையும்
பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
அருட்கவி சி. விநாசித்தம்பியும்
குடும்பத்தாரும்

அளவெட்டி,
25 3-78. 8879

## லோகநாதன் இன்ஸ்ரிரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
புதிய வகுப்புகள் ஆரம்பம் 1-4-78
G C E. O/L ஒகஸ்ட் பரீட்சைக்குரிய
முழுநேர வகுப்புகள்
G. C. E. A/L 1979 ஏப்பிரல் பரீட்சைக்கான
வகுப்புகள்
தகைமைகள்:- G. C. E. O/L 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும் அல்லது 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும். அதில் 3 பாடங்களில் திறமை சித்தி இருத்தல்வேண்டும்.
விண்ணப்பப்படிவங்களை சொந்த விலாசமிட்ட தபாலுறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி:31-3-78

## நன்றி நவிலல்

திரு. திருமதி செல்லப்பா (லண்டன்)

சுன்னாகம் காலஞ்சென்ற முன்னைநாள் விதானையார் ச. மண்டலநாயகம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் டாக்டர் செல்லப்பாவுக்கும், தெல்லிப்பளை டாக்டர் கனகரத்தினம் தம்பதிகளின் புதல்வி சாந்தினிக்கும் லண்டன் மாநகரின், இம்பீரியல் கல்லூரி யூனியன் மண்டபத்தில் கடந்த 29-01-78ல் நடைபெற்ற திருமண வைபவத்திற்கு வருகை தந்திருந்த பிரமுகர்களுக்கும், ஆசிச்செய்திகள் அனுப்பியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தனிப்பட்டமுறையில் நன்றி கூற முடியாமைக்கு வருந்துறோம்.

இவ்வண்ணம்
திரு. திருமதி செல்லப்பா தம்பதிகள்
லண்டன். 8876

ஈழநாடு
The Eelanaadu

## கொள்ளைகளும் கிளர்ச்சியும்

கொள்ளைச் சம்பவங்கள் மீண்டும் நாட்டின் பல இடங்களிலும் அதிகரித்து வருகின்றன.

பட்டப்பகலில், வங்கிக் கிளைகளில் ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் நுழைந்து, துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுவிடுகின்றனர்.

பாடசாலை ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கும் தினத்தில் பாடசாலைகளின் அதிபர்களே வங்கிக்குச் சென்று பணம் பெற்றுவர வேண்டுமென்பதைத் தெரிந்துவைத்திருக்கும் கொள்ளைக்காரர்கள், வழிமறித்துப் பயமுறுத்திப் பணத்தைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றினுள்ளும் ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் நுழைந்து கொள்ளையடித்துச் சென்ற செய்திகள். சமீப நாட்களில் அடிக்கடி வெளி வந்துகொண்டிருக்கின்றன.

வீடுகளுக்குள்ளும் நுழைந்து, வீட்டுக்காரர்களைக் கொலையும்செய்து, பணத்தையும் பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவங்களும் அதிகம்.

பஸ்களையும் மற்றும் வாகனங்களையும் வழிமறித்துக் கொள்ளையடிக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம், நாட்டில் கிளர்ச்சி தொடங்குவதற்கு முன்னர் சில மாதங்களாக இப்படியான கொள்ளைகளும், கொலைகளும் நாட்டின் பல இடங்களிலும் நடைபெற்று வந்தன.

அச்சமயத்தில் இங்கே இல்லாத "நாம் தமிழர் இயக்கம்" பற்றிப் பெரிதாகப் பிரசாரம் செய்யப் பொலிசாரும் அதைப் பற்றியே ஆராய்ந்து, பின் தொடர்ந்து சென்றார்கள். ஏப்ரல் மாதத்தில் ஆயுதக் கிளர்ச்சி வெடித்த பின்புதான் உண்மை புலப்பட்டது.

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன் நடந்தவை போன்ற சம்பவங்கள் இப்போதும் நிகழ்வதால், பொலிஸ் பகுதியினர், இப்போது முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க முன்வந்திருப்பது நல்லது.

மீண்டும் ஆயுதக் கிளர்ச்சிக்கு அடிகோலப்படுகிறதென்ற அச்சம் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது.

71ம் ஆண்டைப் போன்று ஏதாவது கிளர்ச்சி தொடங்கினால், அதை உடனடியாக முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் பகுதியினரை உஷார்ப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

இதேசமயம் முன்னைய சம்பவங்களில் 'வேலியே பயிரை மேய்ந்த" கதைகளும் இருந்ததென்பதையும் பொலிஸ் மா அதிபர் மறந்துவிடக்கூடாது.

கிளர்ச்சி முயற்சிகளுக்கு அந்நிய சக்திகளின் பின்னணியும் இருக்கிறதா என்பது பற்றியும் ஆராயுமாறும் பொலிஸாரைப் பொலிஸ் மா அதிபர் பணித்திருக்கிறார்.

வடக்கிலானாலும், தெற்கிலானாலும், கிழக்கிலானாலும் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்கள் ஒரே மாதிரியானவையாக இருப்பதால் இப்படியொரு சந்தேகம் எழுவது இயல்பு. அந்நிய சக்திகள் பற்றியும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதும் அவசியம்.

இது மட்டுமல்ல, கிளர்ச்சி இயக்கம் என்று சொல்லிக்கொண்டு கொலை, கொள்ளைகளையே தொழிலாகக் கொண்ட ஐ. ஆர். சி.க்களும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற சந்தேகமும் பொலிஸாருக்கு எழுந்துள்ளது நியாயமே. இவர்கள் விஷயத்திலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம்.

"கோழிக் கள்ளனும் ஆகஸ்ட் தியாகி' என்று அண்ணா ஒரு தடவை சொன்னதுபோல் "இயக்கம்" என்ற போர்வையில் கொள்ளையர்கள் நாட்டைச் சூறையாட எவருமே இடம் அளிக்கக்கூடாது.

கொள்ளை, கொலை, ஆயுதக் கிளர்ச்சி போன்ற முயற்சிகளில் எவர், எதற்காக ஈடுபட்டாலும் அதைத் தடுக்கவும், முறியடிக்கவும் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும்.

# சக்தி வழிபாடும் விரதங்களும்

[அருள் மிகு சுன்னாகம் மயிலணி ஸ்ரீசர்வ மங்களேஸ்வரி தேவஸ்தான ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பிகைக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் இன்று நண்பகல் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதனையொட்டி ஸ்ரீ சி. சர்வேஸ்வரக்குரு ஸ்ரீ சண்முகானந்தக்குருக்கள் எழுதிய இக் கட்டுரை இங்கு வெளியிடப்பெறுகிறது.] (ஆ—ர்)

எழுவாயும் பயனிலையும் பொருளும் போல
எப்பொருட்டு நிமித்தமாய்ப் பேதமாகிப்
பழுதனுமா மணியொளி நீர்த் தண்மை யென்னப்
பரமாகி அகிலாண்ட மெல்லா மான
முழுமுதலை முன்னிலை யொன்றில்லா வாதி
மும்முதலைத் தொழுவரர் தம் வினைவேர் வீழ்த்தும்
மழு வலத்தானிடங்காணு மமல வாழ்வை
மறை பரவு முறைமையை மனத்தவிகிலுய்ப்பாம்.

தொடக்கம் முடிவு இல்லாத (இஃது உலகம் எப்போது உண்டாயது அன்றுமுதல் சைவசமயம் முப்பொருள் உண்மையுடன்பதி-பசு-பாசம்) விளங்கிவருகின்றது. இது தன்னகத்தே அறுவகைச் சமயத்தையும் உள்ளடக்கி உள்ளது. அவை முறையே சைவம் - சிவத்தை முழுமுதற் கடவுளாகவும், சாக்தம் தேவியை சக்தியை முழுமுதல் கடவுளாகவும் வைணவம்-விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகவும் சௌரம் சூரியனை முதற் கடவுளாகவும், காணபத்தியம்— விநாயகரை முதற் கடவுளாகவும், கௌமாரம்-முதற் கடவுளாகவும் கொண்டு வழிபடுவது. இவற்றுள்ளே சைவம் சிவத்திற்கு எப்படி முக்கியமோ அப்படியேதான் சாக்த சமயத்திற்கு சக்தி முக்கியம். ஆனால் இரண்டையும் பிரிக்கமுடியாது அது எது போல் என்றால் நெருப்பிலிருந்து சூட்டை எவ்வாறு பிரிக்கமுடியாதோ அதேபோல் தான், சிவனே முழுமுதற் கடவுளாகக் கைக்கொள்வோரும் அவர் எதனால் செயலைச் செய்கின்றார் என்றால் தமது சக்தியால் என்பர். அப்படி சிவனை இயக்குவதும் சக்தி தான். அப்படியே "சிவன் இல்லாமல் சக்தியில்லை. சக்தியில்லாமல் சிவன் இல்லை என்பர். உலகம் தோன்றிய நாள்முதல் சக்திவழிபாடும் சிவத்துடன் இணைந்துள்ளது. அர்த்தநாரீஸ்வரர் தோற்றமும் இதையே குறிக்கின்றது.

உலகம் தோன்றவும் அழியவும் காரணமாகவுள்ள இலிங்கமூர்த்தி சேர்வதற்கு ஆவுடையார் என்னும் சக்தி தேவைப்படுகிறது.

சக்தி போகசக்தி, வீரசக்தி யென இருவகைப்படும். மாரி, காளி, துர்க்கை முதலிய சக்திகள் எல்லாம் வீரசக்தி எனப்படும். மற்றைய சக்திகளை போக சக்தி என்பர். ஆகமங்களிலேயே "சக்தியாதி சக்தி பரியந்தம் அப்யர்ச்சிய" அதாவது சக்தியை முதலாகவுடைய [இந்த உலகைத் தாங்கியிருப்பதும் ஒரு சக்தி. அதுவே ஆதாரசக்தியெனப்படும்] சக்தியை அந்தமாகக்கொண்டு விளங்கும் சக்தி மண்டலம் வரை பூஜித்தகாலம் இதிலிருந்து சக்தியின் முக்கியம் விளங்கும். வேதங்களிலே இருக்கு வேதத்திலே 10ம் மண்டலர் 125ம் சூக்தம், யசுர் வேதத்திலே ஸ்ரீசூக்தம், துர்க்கா சூக்தம் என அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது. யந்திரங்களிலே ஸ்ரீசக்ரயந்திரம் முக்கியமாக பூஜிக்கப்படுகின்றது.

அந்தணர்களின் பிரம்ம உபதேசமாகிய காயத்திரியும் சூரியமண்டலத்துள் விளங்கும் ஒரு சக்தியாக நினைத்து துதிக்கிறார்கள். தேவி பாகவதம் 12 ஸ்கந்தமாகவுள்ளது. இதில் தேவி சம்பந்த சகலவிடயங்களும் அடங்கியுள்ளன. வியாசர் இயற்றிய பதினெண் புராணத்திலே பிரம்மாண்ட புராணத்தில் லலிதா சகஸ்ர நாமம் என்னும் நாமத்தில் 80-வது நாமத்திலே விஷ்ணுவின் 10-ம் அவதாரமும் அம்பாளின் பத்து விரல் நகங்களிலிருந்து தோன்றியது. இவற்றை நாம் ஆராயும்போது உலகுக்கும் அதன் அசைவிற்கும் சக்திதான் காரணமாகின்றது. ஆதிசங்கரர் தேவிவழிபாடு செய்து துறவறத்தில் இருந்து சமாதியெய்தினார். இவர் இயற்றிய சௌந்தர்யலகரியில் அருமையாக அம்பாளை வர்ணித்துள்ளார். இதேபோல அபிராமிப் பட்டர் அரசசபையிலே அமாவாசையன்று பூரணையென்று கூறி அம்பாளை வழிபட்டு அன்றிரவு அம்பாள் தனது தோட்டைக் கழற்றி வீசி சந்திரஒளி பிரகாசிக்கச் செய்தாள். அப்போது எழுந்த பாடல்தான் அபிராமி அந்தாதி எனப்படும் நூல். அம்பாள் மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும் காசியில் விசாலாட்சியாகவும், தில்லையில் காளியாகவும் திருவேற்காட்டினிலே கருமாரியாகவும் எழுந்தருளியிருந்து அருள் புரிகின்றாள். தேவியை வழிபடுவோர்க்கு முக்கிய விரதங்கள் திங்கட்கிழமை விரதம், செவ்வாய்க்கிழமை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் என வார விரதங்களாகவும், பூரணை திதி விரதமாகவும் பூரம் நட்சத்திர விரதமாகவும் இருப்பார்கள். ஆடிப்பூரம் அம்பாளுக்கு மிக முக்கியதினம். புரட்டாதி மாதம் பூர்வபக்ஷ பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது தினம் நவராத்திரியாகும். இதில் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி முதலிய மூன்று சக்திகளையும் மும்மூன்று நாட்கள் பூசிப்பதாகும். கடைசிப் பத்தாவது தினம் மூன்று சக்திகளும் ஒன்றுசேர்ந்து மகிசாசுரமர்த்தனியாக மகிசாசுரனை சம்காரம் செய்வது (மானம்பூ உற்சவம்) எனப்படும். ஐப்பசி மாதம் பூரணை தினத்தில் காமேஸ்வரி விரத பூஜை. இதேமாதம் அமாவாசை முதல் இருபத்தியொரு நாள் அம்பாள் கேதாரநாதரைப் பூஜித்த நல்விரதமாகும். மார்கழி மாதம் திருவாதிரை முன் ஒன்பதுநாள் கன்னிப்பெண்கள் விரதம் இருந்து இறைவனை வழிபடுதல். பங்குனி மாதம் திங்கள் வாரவிரதம் தேவிக்கு முக்கியமாகும். இதேமாதம் உத்தர நட்சத்திரம் இறைவன் அம்பாள் திருக்கல்யாண தினமாகும். இந்த விரதங்களை நியமமாகக் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் இம்மையில் சகல அஷ்ட ஐஸ்வரியங்களும் ஈற்றில் தேவியின் பாதாரவிந்தங்களை அடைந்துமோட்ச சாம்ராஜ்யம் பெறுவார்கள்.

### மணிவாக்கு

உலகையே வெல்லக்கூடிய காந்த சக்தியை, 'தெய்வம் நம்முள் வைத்திருக்கிறது. அறிவுக்கு எட்டாத அற்புதங்களை அறிவுறுத்தும் அந்தக் கற்பனை சக்தி நம்முள் இருக்கிறது அதை நாம் உணர வேண்டும்.

—ரோமன் ரோலந்து

## 'முப்பொருள் உண்மை விளக்கம்' 2ம் திகதி வெளியீடு

[யாழ்ப்பாணம்]

திரு. மு. இளையதம்பி எழுதிய 'முப்பொருள்உண்மை விளக்கம்' என்ற நூல் வெளியீட்டு விழா அடுத்தமாதம் 2ம் திகதி பிற்பகல் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

"ஒவ்வொருவரும் தாமாகக் கற்கக் கூடிய வசதியும் ஏற்ற நூலும் இல்லாத இந்நேரத்தில், உரைநடையில் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டு வெளிவரும் "முப்பொருள் உண்மை விளக்கம்" என்ற நூல் சைவாபிமானிகள் யாவராலும் வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்து நாகரிகம் என்ற பாடத்தைக் கற்கும் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கும், பல்வேறு சமயங்களை ஆராய்ந்து கற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அதிக பயனுடையதென்பதில் ஐயமில்லை இந் நூல் அறிவியல், சாஸ்திரவியல், அனுபவவியல் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுளது வாழ்க்கையில் சைவசமய அடிப்படையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கமுறைகளைப் பற்றி அறிவியற் பகுதியும் சித்தாந்த சாஸ்திரங்கள் நமக்கு அளிக்கும் அறிவின் சாரத்தை இயன்றளவு தெளிவாக சாஸ்திரவியலிலும் விளக்கப்பட்டுள்ளது அனுபவவியலை அநுபூதிமான்கள் கண்டறிந்த உண்மைகள் எடுத்துவிளக்கப்படுட்டுள்ளன மூன்று பகுதிகளும் அடங்கிய இந்நூல் 300 பக்கங்களைக் கொண்டுள்ளது' என்று சைவ அன்பர் எழுதுகிறார்.

இந்நூல், 'கதிபாற்செல்ல ஏது நெறி' என்று விசாரிப்பார்க்கு உபகரிப்பதொரு கைந்நூல்' என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை கூறியிருக்கிறார்.

## ஆசிரியருக்குக் கடிதம்:

# குடிக்கத் தண்ணீரில்லை பாண்ட்வாத்தியம்தேவையா?

சுமார் 1200 பிள்ளைகள் படிக்கும் பாடசாலையில் நிரந்தரமான குடிநீர் வசதி இல்லை. ஒரு கிணற்றைத் தோண்டி இக் குறையை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக இப்பாடசாலையின் அதிபரும் பெற்றோர்-ஆசிரியர் சங்கமும் 'பாண்ட்' வாத்தியக் கோஷ்டியொன்று நிறுவுவதற்கு நிதி திரட்டிவருவது பெற்றோர் மத்தியில் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள சென். மேரிஸ் வித்தியாலயம் எனப்படும் இப் பாடசாலைக்கு அதன் அருகிலுள்ள திருச்சபையின் தயவினாலேயே குடிநீர் வழங்கப்படுகின்றது. திருச்சபைக் கிணற்றுக்குரிய 'மோட்டர்' பழுதானால் அல்லது மின்சாரம் தடைப்பட்டால் பிள்ளைகள் பெரும் அல்லலுக்குள்ளாவது வழக்கம். பாடசாலைக்கும் திருச்சபை வளவுக்குமிடையில் அண்மையில் மதில் போட்டபின், பிள்ளைகள் கிணற்றிலிருந்து வாளியால் தண்ணீர் அள்ளிப் பருகமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது அத்துடன் இக்கோடை காலத்தில் பிள்ளைகள் குடிநீர்ப் பிரச்னையால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

குடிநீர்ப் பிரச்னைமட்டுமல்ல, இப்பாடசாலையில் வேறு முக்கிய பிரச்னைகளும் தீர்க்கப்படாதுள்ளன. விஞ்ஞான உபகரணங்களைக் கையாண்டு படிப்பதற்கு ஓர் அறை இல்லை; சங்கீத ஆசிரியர் மர நிழலில் பாடம் நடத்துகின்றார்.

இந்த நிலைமையில் தான் 'பாண்ட்' வாத்தியக் கோஷ்டி நிறுவுவதற்கு நிதியுதவிக் காட்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டு பெற்றோரிடம் டிக்கட் விற்பனை செய்யப்படுகின்றது. பொதுமக்களிடமிருந்து திரட்டும் பணத்தை வீண் ஆடம்பரத் தேவையில் விரயமாக்காமல், பிள்ளைகளின் அத்தியாவசியத் தேவையான குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்குமுகமாக. ஒரு கிணற்றைத் தோண்டுவதற்குப் பாடசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்கமும், வடமாநிலக் கல்விப் பணிப்பாளரும் முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று பெற்றோர் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

கிணறு தோண்டிக் கட்டுவதற்குத் திரட்டப்படும் நிதி காணுதவிடத்து. கட்டிட நிதிக்கென இப்பாடசாலையில் முன்பு திரட்டப்பட்ட நிதியைப் பயன்படுத்தலாமென பெற்றோர் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. அண்மையில் தான், அரசாங்கச் செலவில் இப்பாடசாலைக்கு ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

அ. மரியதாஸ்.
யாழ்ப்பாணம்.

# பூட்டோவின் அப்பீல் மனு: லாகூர் நீதிமன்றம் ஏற்றது

லாகூர், மார்ச் 26

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோதமக்குவிதிக்கப் பட்ட மரண தண்டனை க்கு எதிராகத் தாக்கல் செய்த மேன் முறை யீட்டு மனுவை லாகூர் உயர் நீதிமன்றம் ஏற் றுக்கொண்டுள்ளது.

இத்தகவலைப் பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

## 100 பேர் கைது

பூட்டோவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்த்துப் பாகிஸ்தானில், நாசகாரச் செயல்கள், ஆர்ப் பாட்டங்களில் ஈடுபட்டதா கக் கடந்த இரண்டு நாட்களில் 100 பேர் கைதுசெய்யப்பட்ட தாகவும் அறிவிக்கப்படுகிறது.

## இறுதி வழி

இம்மரணதண்டனை ரத்துச் செய்யப்படாத பட்சத்தில், பாகிஸ்தான் ஜனாதிபதி சௌத்திரியிடம்கருணை கோரு வதே இறுதி வழியாக இருக்கு மெனக் கூறப்படுகிறது. (உ)

# மத்திய கிழக்கில் சமரச முயற்சி; சதாத் இனியும் தயார்

கெய்ரோ, மார்ச் 26

மத்திய கிழக்குப் பிரச்னை யில், சுமுகமான நிலை ஏற் படக்கூடிய சமாதான முயற் சிகளில் எகிப்து தொடர்ந் தும் ஈடுபடும் என்று எகிப் திய அதிபர் அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்

இஸ்ரேலுடன் இப்பிரச்னை பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட, எகிப்து கொள்கை யளவில் தயாராக இருக்கிறது என்று எகிப்திய வெளிநாட்டு அமைச்சர் ஜஹுப் கமால் கூறி யிருக்கிறார்.

அரபு பிரதேசங்களில் யூதர் குடியேற்றம் முதலான விவ காரங்கள் குறித்து இஸ்ரேலின் நிலைப்பாட்டை அறிந்தே பேச்சுக்கள் அமையுமென்றார் அவர்.

## விசேட கூட்டம்

எகிப்தின் உயர் மட்டத் தேசிய சபையின் விசேட கூட் டத்தையடுத்தே இக்கருத்துக் கள் வெளியிடப்பட்டன.

## யுத்த சேதம்

இதேவேளை, இஸ்ரேலிய பலஸ்தீனிய கமாண்டோக் களின் சண்டை நடைபெறும் யுத்த முனைக்கு ஐ. நா. பாது காப்புச்சபை மேலும் சமாதா னப்படை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது என்று நியூ யோர்க் அறிக்கைகள் தெரி விக்கின்றன.

இந்த யுத்தத்தில் 1,000 பேருக்கு மேல் பலியானதாக வும் 2 லட்சத்து 65,000 பேர் வீடிழந்தாகவும் அறிக்கை கள் தெரிவிக்கின்றன, (உ)

# "சமூகத்தில் உயர் ஸ்தானம் தருவது கல்வி"

— உடுப்பிட்டி எம். பி.

(நெல்லியடி)

"கல்வியில் உயர் நிலையை அடைவதன்மூலமே சமூகத்தில் ஓர் உயர்ந்த நிலையை அடைய முடியும். கல்வியானது பண்பை வளர்க்கும். அந்தப் பண்பு தான் மனிதனை மனிதனாக மதிக்கவைக்கும் பெரிய சாதன மாகும்."

மேற்கண்டவாறு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி யின் வருடாந்த இல்ல விளை யாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் பேசு கையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. எம். எஸ். சினித்தம்பி தலை மையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. இராசலிங் கம் தொடர்ந்து குறிப்பிட்ட தாவது:-

"தேவரையாளி இந்துக் கல் லூரி இந்துசமயத்தையும், பண்பையும் வளர்த்துவரும் தாபனங்களில் மிகவும் குறிப் பிடத்தக்களவிற்கு பணியாற்றி வருகின்றது. சிறுபான்மைத் தமிழரில் அதிகமானோர் இன்று ஆசிரியர்களாகவும் பட்டதாரி களாகவும் இருக்கின்றார்கள். இவர்களெல்லோரும் இந்தக் கல்லூரியில் படித்தவர்களே. இக்கல்லூரி தொடர்ந்தும் நற்பிரஜைகளை நாட்டிற்கும் குறிப்பாக தமிழ் இனத்திற்கும் உருவாக்கிக் கொடுத்தல் வேண் டும். அந்த புனித கைங்கரி யத்தை அதிபரும் ஆசிரியர் களும் நிறைவேற்றுவார்கள் என்பதில் எனக்கு பூரண நம் பிக்கை உண்டு.

இப்பாடசாலையின் வளர்ச் சிக்காக என்னால் முடிந்தளவு உதவிகளையும் ஒத்தாசைகளை யும் வழங்குவேன். இப்பாட

(5-ம் பக்கம் பார்க்க)

# ஆசிய பசுபிக்பிராந்திய தொழில்மந்திரிகள் மாநாடு

வெலிங்டன், மார்ச் 26

நியுசிலாந்தின் தலைநகரான வெலிங்டனில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்தியத் தொழில் அமைச்சர்களின் ஏழாவது மாநாடு முடிவடைந் தது.

கிராமியத்துறை வளர்ச்சி பற்றி இம்மாநாட்டில் முக்கிய மாக ஆராயப்பட்டது

வேலை வாய்ப்பு, தொழில் நுட்பவியல் உதவி சர்வதேச தொழில் ஸ்தாபன நடவடிக் கைகள் பற்றியும் இம்மாநாட் டில் கவனம் செலுத்தப்பட் டது.

தேசியப் பொருளாதார அபி விருத்தியில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று மாநாட்டில் வலியுறுத்தப்பட் டது.

இலங்கையின் பிரதிநிதியாக பிரதித் தொழிலமைச்சர் திரு. யோசேப் பெரேரா கலந்து கொண்டார். (உ)

# யாழ். றோட்டரி நடத்தும் சிறந்த நடத்துநர் தெரிவு கூப்பன்

நடத்துநரின் பெயர்........................................

பதிவு இலக்கம்..............................

அனுப்புபவரின் பெயர் ..............................

அனுப்புபவரின் விலாசம்..............................

திகதி .............. ..............................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக் கப்படும். (இ)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன்...லீலா...எம். ஆர். ராதா...நாகேஷ்...மனோரமா
— புதிய பிரதி —
நாகமலை அழகி நடனங்கள் கலரில்
மந்திரஜாலங்கள், சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை
(டெக்னிக் கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி. கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
சின்னஞ்சிறு உலகம்
(புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்: ஜி. ஆர்:--வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

கடைசி வாரம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெயசித்திரா
நடித்த
பணக்கார பெண்

Rio Jaffna (Phone:7607)
Daily 10-30 a. m. 4-45, 7-00 and 9-45 p.m
Elizabeth, Ashley, Joe, Don Baker, JimKelly
in
GOLDEN NEEDLES
(ஒரு பெண்ணின் கராட்டிச் சண்டை பிரமாதம்)
Color (Advance Booking for Families Accepted) Scope

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன், மனோரமா
நடித்த
K. R. G. பிக்சர்ஸ்
ஜானகி சபதம்

Regal (Jaffna) Daily 4-30, 7-00 and 9-30 p.m.
Starring Three of the World's Most Popular Actors
MICHAEL CAINE, DONALD SUTHERLAND.
ROBERT DUVALL
Daring attempt by a group of German Paratroopers to Kidnap Britain's Wartime Prime Minister, Winston Churchill
THE EAGLE HAS LANDED
(Color-War film)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ். நகர்) போன் 7698
முத்துராமன், சிவகுமார். சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

3-வது வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் -ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

வெலிங்டன் (?) / வெல்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கணேசன்—சுபாஷினி
நான் உங்கள் தோழன்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா
நடித்த
நினைத்ததை முடிப்பவன்

# 'எதிர்காலம் உண்டு என்னும் நம்பிக்கை எமக்கு உண்டு'

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை ஆண்டறிக்கை

(யாழ்ப்பாணம்)
ஈழம்வாழ் தமிழினம் இன்று மிக நெருக்கமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறது. 25 ஆண்டு இடைவெளிக்கிடையில் இரு பெரிய இனக்கலவரங்களைக் கண்டதோடு பல உயிர்களை இழந்தும் கோடிக்கணக்கில் உடமைகளை இழந்தும் இருள்சூழ்ந்த நிலையில் ஈழத்தமிழராகிய நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எமக்கு எதிர்காலம் உண்டோ என்பது கேள்விக்குறியாகவிருப்பினும் எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையோடுதான் செயலாற்றுகின்றோம். இந்த நம்பிக்கை இல்லையெனில் எமக்கு வாழ்வு இல்லை யென்பது முடிந்த முடிவாய்விடும்''

இவ்வாறு கொழும்பு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளை தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது. ந. தங்கராசாவால் விடுக்கப்பட்ட ஆண்டறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:

### தமிழீழமே எமது இறுதிக் குறிக்கோள்

தமிழினத்தை வழிநடத்தக் கூடிய ஒரேஒரு இயக்கம் தமிழர் விடுதலைக்கூட்டணியே என்பது தமிழர் ஏற்றுள்ள முடிவாகும். 1977 யூலையில் நடைபெற்ற பொதுத்தேர்தல் —தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு— தமிழீழம் ஒன்றுதான் தமிழினத்தை வாழ்விக்க முடியும் என்பதேயாகும். தமிழீழக் கொள்கையில் தமிழ் மக்களுக்கும் எம் நிலையைத் தெளிவாக விளக்கியதோடு, உலகின் கவனத்தையும் எம்பால் ஈர்க்கும் முறையில் அமைந்துள்ளது. ஆனால் தேர்தலில் நாம் வழங்கிய தீர்ப்புக்கொண்டு நாம் கோரிநிற்கும் தமிழீழத்தை சிங்களக்கட்சிகளோ இங்கள இனமோ வெள்ளித்தட்டில் வைத்துப் பரிசாக வழங்கப்போவதில்லை. தந்தைசெல்வாவின் கூற்றில் வைத்துக் கூறின் ''தமிழீழத்தை அடைவதென்பது வில்லங்கமான காரியந்தான் ஆனால் தமிழினம் தப்பிப் பிழைக்கவேண்டுமெனில் இதை விட வேறுவழியில்லை''

### கட்டுக்கோப்பான இயக்கம்வேண்டும்

எம் விடுதலைப்போராட்டம் பயனுடையதாகவும், பொருளுடையதாகவும் விளங்க வேண்டின் எமக்கு ஒரு கட்டுக்கோப்பான இயக்கம்வேண்டும்: ஒரு இனத்தின் விடுதலைக் கொள்கைப் பற்று முக்கியமெனினும், நீண்ட விரிந்த துயர்தோய்ந்த போராட்டத்துக்கு, நாம் ஆயத்தமில்லாத நிலையில் எம் குறிக்கோளில் வெற்றியடையமுடியாது. இவை அனைத்தையும் நினைவில் கொண்டு, த. வி. கூட்டணியின் தலைமைச்செயலகம் சீரோடும் சிறப்போடும் இயங்க வேண்டின் தலைமைச்செயலகத்திற்கும் அதன் கிளைகளுக்கும் இடையில் நெருங்கிய உறவும், தொடர்பும் வேண்டுமென வலியுறுத்தி வைத்துள்ளோம்.

### மூப்பெரும் மூத்த தலைவர்களின் மறைவு

எம் கிளை பணியாற்றிய காலகட்டத்தில் எம் இனத்தின் மூத்த தலைவர்களாகிய திரு. மு திருச்செல்வம், திரு. ஜீ ஜீ பொன்னம்பலம், தந்தை செல்வா ஆகியோர் அடுத்தடுத்து மறைந்தது எம் இனத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இவர்களின் இறுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு எமது பங்களிப்பினையும் ஆற்றியமை யாவரும் அறிந்ததே.

### கட்சிகள் மாறின

ஸ்ரீ. ல. சு. கட்சிக்குப் பதிலாக இன்று ஐ. தே. கட்சி இந்நாட்டை ஆளுகின்றது. கட்சிகள் மாறிவிட்டன. ஆனல் தமிழர் பிரச்னையைப் பொறுத்த அளவில் எவ்வித தீர்வும் தோன்றுவதற்கு அறிகுறியில்லை. காரணம் ஆளும் கட்சிகள் மாறிய நிலையிலும் ஆளும் இனம் ஒன்றுதான். ஆளப்படும் இனமாகத் தமிழினம் இருக்கும்வரையில் 'தமிழினத்துக்கு விடிவோ விடுதலையோ, வாழ்வோ, வளமோ கிடைக்கப்போவதில்லை. தரப்படுத்தலை நீக்குவதோ, மொழிக்கு 'ஏதோ' தகமை வழங்குவதோ, தமிழர் சிலருக்குத் தொழில் வாய்ப்பு வழங்குவதோ தமிழினத்தின் பிரச்னைக்குத் தீர்வு காண்பதாக அமைய முடியாது. இவை அனைத்தையும் தந்த நிலையிலும் எமது தாயகத்தைப் பறிக்கும் செயல் தொடரும் வரை எம்மினம் இந்நாட்டில் தலை தூக்க முடியாது; எம் நிலப்பாதுகாப்பிலேயே எம் இனத்தின் நிலையான பாதுகாப்புத் தங்கியிருக்கிறது. தமிழ் ஈழத்தைத் தோற்றுவிப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் எமது தாயகப் பாதுகாப்பில் நாம் கவலையீனமாய் இருக்கமுடியாது. தமிழ் ஈழத்தின் தோற்றத்தின் அடித்தளம் எம் தாயகத்தின் எல்லைப் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.

### தூய்மை, தெளிவு, துணிவு, துணை நிற்கட்டும்

எமது இனத்தின் விடுதலை எமது தூய தொண்டிலேயே அமைந்துள்ளது. தூய உள்ளத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், துடிப்போடும், துணிவோடும் நாம் செயலாற்றின் வெற்றி நமதே. எப்பொழுது எமக்கு விடுதலை கிட்டும் என அறுதியிட்டு உறுதியுடன் கூற முடியாவிடினும் எமது எதிர்ப்புணர்ச்சியைத் தளரவிடாது பேணிக் காக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

சலுகைகள் கெஞ்சிப் பெறுவது, உரிமைகள் கேட்டுப் பெறுவது, ஆனல் விடுதலையோ நாமே நமக்கு நிலைநாட்டுவது. நாம் இன்று நாடி நிற்பது விடுதலையே: இதை நினைவில் வைத்துச் செயற்படுவோமாக.

## நீர்நில வளங்கள் பயன் பற்றி வவுனியா சிவா கவலை

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் நில, நீர் வளம் இருந்தும் விஞ்ஞான ரீதியில் அவற்றை நாம் சரியாகப் பயன்படுத்த முடியவில்லையே என்று வவுனியா எம்.பி. ரி. சிவசிதம்பரம் நொஞ்சிமோட்டை கனிஷ்ட வித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

வட்டாரக்கல்வியதிகாரி திரு. எம். சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற மேற்படி திறப்பு விழாவில் திரு. தா. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் எமது வவுனியா தொகுதியிலே நிலம், வளம் குளம் என்பன இருந்து விவசாய வசதியை கடந்த காலங்களில் கொடுத்தால் எமது தொகுதியிலே கல்வி வசதி முன்னேறுமல் இருந்தது. ஆனல் நிலம் வளம் குளம் எல்லாம் இருந்தும் அதனை விஞ்ஞானமுறைப்படி செய்ய போதிய கல்வி கற்றவர்கள் எமது தொகுதியில் இல்லை யென்றே கூறலாம் ஆகையால் நாம் கல்வி வசதியை எமது தொகுதியில் முன்னேற்றம் அடைய செய்ய வேண்டும் கடந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் செலவு செய்யப்படாமல் வேறுதிணைக்களங்களினுல் திருப்பப்பட இருந்த சுமார் 30 லக்ஷம் ரூபாவை பொறுப்பேற்று ஒருமாத காலத்திற்குள் வவுனியா மாவட்டத்தில் பதினெரு பாடசாலையை கட்டி முடித்தமைக்கு வவுனியா பிரதம கல்வியதிகாரியையும் ஏனைய அதிகாரிகளையும் பாராட்டுகிறேன் என்ருர். [உ]

## மாணவர்க்கு தொழில்துறை ஈடுபாடு வேண்டும்''
### — யாழ், வித்தியாதிபதி

(உடுப்பிட்டி)
''கல்லூரிகளில் பண்ணை முறைகளை உருவாக்குவதில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம் முன்மாதிரியாகத் திகழ்கின்றது. இவ்விடயத்தில் இக் கல்லூரி அதிபர் திரு.குணரத்தினம் இதரபாடசாலைகட்கு வழிகாட்டியாக விளங்குகின்ருர்''

இவ்வாறு நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் மாட்டுப்பண்ணை ஒன்றைத் திறந்துவைத்துப் பேசிய வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;
''மாணவர்களைத் தொழிற்துறையில், குறிப்பாக பண்ணை வளர்ப்புத்துறைகளில் ஈடுபடுத்துவது மேல்நாடுகளில் புதுமையானது அல்ல. இதன்

[6ம் பக்கம் பார்க்க]

# 'இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்தவேண்டும்'
## கருத்தரங்கில் லயன்ஸ் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)
''தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் எமது எதிர்காலச் சந்ததியினரை அக்கறை கொள்ளத்தூண்டுவதுடன், இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்தி, தாங்களே தங்களது மேம்பாட்டை விருத்திசெய்யும் நிலையை தோற்றுவிப்பதுமே, இக் கருத்தரங்கின் நோக்கமாகும்'' என்று யாழ். லயன்ஸ் கழகத்தினரால் கடந்தவாரம் இலங்கை வங்கி யாழ். பிராந்திய அலுவலகத்தில், ''இளைஞர்களுக்கான அபிவிருத்தி சார்ந்த கருத்தரங்கை'' ஆரம்பித்துவைத்து உரையாற்றிய லயன்ஸ் ஆளுநர் திரு. ஒஸ்வின் சில்வா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ''இந்த நாட்டின் முழு இளைஞர் அபிவிருத்தித்திட்டங்களையும் எடுத்துநோக்கும் போது இத்திட்டம் ஒரு சிறு பணி என்பதை நாம் உணர்ந்துள்ளோம். இக்கருத்தரங்கு பயனுள்ள விதத்தில் தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும், அவர்கள் செல்ல வேண்டிய சரியான பாதையையும் எடுத்துக்காட்டும் என்ருர்.

''இங்கு இடம்பெறும் கருத்துப்பரிமாறலினுல் உதயமாகும் செயல்திட்டம்; இளைஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் அமுல் செய்ய வாய்ப்புகளை உண்டாகும்'' என்றும் அவர் கூறினர்.

கருத்தரங்கில் ''பொருளாதார அபிவிருத்தியில் இளைஞரின் பங்கு'' என்னும் பொருள்பற்றி கலாநிதி டபிள்யு. எல். ஜெயசிங்கமும், ''பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சியில் சமூகத்தின் மனோபாவம்'' என்னும் பொருள் பற்றி திரு. ஆர். ஐ. கனகரத்னமும், விவசாயம் பற்றி திருவாளர்கள் எஸ். கனகரட்ணம்; எஸ். கிருஷ்ண பிள்ளை; ஏ. ஜே. லூயிஸ், கைத்தொழில் பற்றி, திருவாளர்கள் சி. சண்முகலிங்கம், என். சோமசுந்தர ஐயர், ஜோசேப்பத்திநாதனும், கடற்றொழில்பற்றி திருவாளர்கள் எஸ். ஸ்ரனிஸ்லொஸ், லயன் ரி. தயாபரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துக்களை வெளியிட்டனர்

...

## அம்பாள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)
ஊரிகாவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீமகாமாரி அம்பன் தேவஸ்தான இலட்ஷ நாம அர்ச்சனை அடுத்த மாதம் 5-ம் திகதி ஆரம்பமாகி 7-ம் திகதி மகா சங்கபிஷேகமும் குளிர்த்தியும் நடைபெறும்.

## மாஜி இத்தாலிய பிரதமர்மீது

# மக்கள்நீதிமன்றம் விசாரணை நடத்துகிறதாம்
## ரோமாபுரியில் அறிவிப்பு

லண்டன், மார்ச் 26
கடந்த ஒன்பதுதினங்களுக்கு முன் செம்படையினரால் கடத்திச் செல்லப்பட்ட இத்தாலிய முன்னாள் பிரதமர் அல்டோ மோரோ மக்கள் நீதிமன்றத்தின்முன் நீதிவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோமாபுரியில் உள்ள செய்தி பத்திரிகை அலுவலகம் ஒன்றின்முன் இதுபற்றிய அறிவித்தல் செம்படையினரால் போடப்பட்டிருப்பதாக ரோமாபுரி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடத்திச் செல்லப்படும் போது அல்டோ மோரோவின் மெய்க்காவலர் ஐவர் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே: [உ]

## நோயாளருக்கு இலவச உணவு இல்லை

(கரணவாய்)
அம்பன் அரசினர் மருத்துவமனையில் இலவச உணவு நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளிகள் மிகவும் கஷ்டமுறுவதாகவும், இலவச உணவு தொடர்ந்து விநியோகிக்கப்படவேண்டுமெனவும் அம்பன் கிராம முன்னேற்றச் சங்கம் சுகாதார அமைச்சரை வேண்டியுள்ளது. (உ)

## கடலரிப்பை தடுக்கநடவடிக்கை

(கரணவாய்)
அம்பன், குடத்தனை கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுக்குமுகமாக களவாக மணல் ஏற்றுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வடமராட்சி வடகிழக்கு உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து களவாக மணல் ஏற்றுவது குறைந்துள்ளது. குடத்தனை சந்திகளில் காவலாளிகளை நிறுத்திவைக்கவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பூட்டான் மன்னர் இந்தியா விஜயம்

புதுடில்லி, மார்ச் 25
பூட்டான் மன்னர் இன்று இந்தியாவுக்கு விஜயம் செய்தார். மன்னரைக் கௌரவிக்கும் முகமாக ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி மன்னருக்கு இரவு விருந்தளித்தார்.

## சமூகத்தில்—

[4ம் பக்கத் தொடர்ச்சி
சாலைக்கு அத்தியாவசியமானதெனக் கருதப்படும் கட்டிட வசதிகளை பெற்றுத்தர நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துள்ளேன் என்ருர்.

## மனைவிக்கு—

(2ம் பக்கத் தொடர்ச்சி)
சென்ற பெண்ணின் உடலில் முக்கிய பாகங்களை வைத்திய பரிசோதனையின் பொருட்டு கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார்.

தலைமறைவான அ. திருமேனியை தேடிக் கண்டு பிடிப்பதில் மட்டக்களப்பு பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட

# தமிழ் ஊழியர்களிடமிருந்து விபரம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி, பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ஊழியர்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளை, தமது சட்டத்தரணிகள் மூலம் சன்சோனி கமிஷன் விசாரணை ஆணைக்குழுவின் விதப்புரைக்கு சமர்ப்பிக்கவுள்ளன.

இதற்காக பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் தமது விபரங்களை சத்தியக் கடதாசி மூலம், செயலாளர்நாயகம், தமிழ் தொழிற்சங்க கூட்டணி 238, பிரதான வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு, தமிழ் தொழிற்சங்க கூட்டணி கோரியுள்ளது.

பின்வரும் விடயங்கள் விதிப்புரைக்கு கோரப்பட்டுள்ளன.

1 காயமுற்றும், சொத்துக்களை இழந்தும் பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களையும், உத்தியோகத்தர்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்தல்.

2 ஆகஸ்ட் இனக்கலவரத்தின்போது உயிர்களை இழந்த தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் விதவைகள், இதுவரையும் அவர்கள் ஒய்வூதியத்தையும் இதர கொடுப்பனவுகளையும் பெறுதிருப்பின் அவைபற்றிய விபரங்கள்

3. பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேவையாற்ற முடியாத காரணத்தால் அவர்களை இடமாற்றம் செய்வதற்கு பொருத்தமான இடமின்மையாலும், பதவியிலிருந்து ஒய்வு பெற விரும்புவோரின் விபரங்கள்.

4. ஆகஸ்ட் கலவரத்தின் பின் ஏதேனும் காலப்பகுதிக்கு தங்கள் சம்பளங்களை அல்லது இளைப்பாற்று ஊதியத்தை இதுவரை பெற்றுக்கொள்ளாத ஊழியர் விபரங்கள்.

5 கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களை எதிர்நோக்கும் வேறு ஏதேனும் பிரச்னைகள் ஆகிய விபரங்கள் கோரப்பட்டுள்ளன இவைகள் ஏப்ரல் 10ந் திகதிக்குமுன் அனுப்பப்படவேண்டும். (கெ)

## வைத்தியத் துறையினருக்கு சட்டமும் தெரிந்திருக்கவேண்டும்

### நூல் வெளியீட்டுவிழாவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''வைத்தியத்துறையில் சேவையாற்றுபவர்களுக்கு சட்டமும் ஒரளவு தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் வைத்தியத்துறைக்கும் சட்டத்துறைக்கும்நெருங்கிய தொடர்புண்டு. இல சமயங்களில் சட்டத்தின் உண்மையைப் புரியாமல், கவலையீனமாக சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டும் சமயங்களில் வைத்தியர்கள் தமது பங்கைசரிவர செய்வதில்லை. இந்தவகையில் இந்நூலாசிரியர், வைத்தியத்துறையுடன் சட்டத்தையும் ஒரளவு தெரிந்திருப்பது பாராட்டப்படவேண்டியது'' என்று யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் நடைபெற்ற வைத்திய கலாநிதி செல்வி இந்திரா தர்மலிங்கத்தின் ''வாழ்வின் வழி'' என்னும் நூல்வெளியீட்டு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

இவ்விழாவிற்கு யாழ்ப்பாண எம். பீ. திரு.வெ. யோகேஸ்வரன் தலைமைவகித்தார். மங்கள விளக்கை திருமதிகள் அமிர்தலிங்கம் யோகேஸ்வரனும் ஏற்றிவைத்தனர்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்; நூலாசிரியரின் தந்தையார் அரச சேவையில் சேவையாற்றிக் கொண்டிருக்கையில் பல நூல்களை பாடசாலை மாணவர்களுக்காக வெளியிட்டார். அவர் ஆற்றிய இப்பணியை அவரது மகளும் செய்வதையிட்டு பெருமையடைகின்றேன்'' என்ருர்.

திரு. கோவை. மகேசன் உரையாற்றுகையில் ''தமிழ் மக்கள் இன்று மயக்கநிலையில் இருக்கின்ருர்களோ என்று எண்ணிய சிலருக்கு தமிழ் மக்களுடைய வாழ்விற்கு, முஸ்லிம்களும் தமிழரும் இணைந்து தான் வழிகாணவேண்டுமென்பதை இவ்விழா எடுத்தியம்புகின்றது என்ருர்.

நூலின் முதற்பிரதியை, எஸ். ரி ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராசா பெற்றுக் கொண்டார். (கெ)

## உண்ணாவிரதமிருக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுசங்க உறுப்பினர்கள் இம்மாதம் 28-ந் திகதி திட்டமிட்டபடி கள்கொடா இயக்கத்தை நடத்துவர்.

அத்துடன் அன்றையதினம் காரியாலய முன்றலில் உண்ணாவிரதமும் அனுஷ்டிப்பர்

சங்க ஊழியர்கள் சமர்பித்த 3 கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்காக நிர்வாக சபை உறுப்பினர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் நடைபெற்ற பேச்சுவார்த்தை பலனளிக்காமையினுல், கள்கொடா இயக்கத்தை நடாத்துவதென நேற்று முடிவுசெய்யப்பட்டது. (கெ)

## அமெரிக்கா சதிசெய்கிறதாம்

லண்டன், மார்ச் 26

சோமாலியாவுடன் ஜிபுட்டி குடியரசை இணைக்க அமெரிக்கா சதிசெய்வதாக எதியோப்பியா குற்றம் சாட்டியுள்ளது.

"தொழிலுறவு வெள்ளையறிக்கை

## தொழிற்சங்க உரிமைகளை பாதிக்கும்!"

(வெள்ளவத்தை)

''தொழிலுறவு வெள்ளை அறிக்கையின் மூலம் தொழிற்சங்கங்கள் முன்பு அனுபவித்து வந்த சட்ட பூர்வமான அதிகாரங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் தொழிற்சங்கமூலம் பெற்று வந்த உரிமைகளுக்கு சாவு மணியடிக்கப்படுகிறது''

இவ்வாறு, லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் இணைப்பிரதிச் செயலாளர் திரு. எஸ். சிவசாமி, தொழிலுறவுச் சட்டத்தின் வெள்ளை அறிக்கை சம்பந்தமாக பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிப்பதாவது!

''இந்த தொழிலுறவுச் சட்டத்தின் வெள்ளை அறிக்கை அமுலுக்கு வந்தால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் தொழிற்சங்கங்கள் அழிக்கப்படும் என்று சட்டம் கூருமல் கூறுகின்றது. தோட்ட தொழிலாளர்களின் நிலையும் பரிதாபகரமாக அமையும். இந்தசட்டத்தின்படி, பரீட்சார்த்த நிலையில் உள்ள எந்த ஒரு தொழிலாளியையும் காரணமின்றி வேலைநீக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு. அவர்களுக்கு தொழில் நீதிமன்றத்திற்கு செல்லும் அதிகாரம் கிடையாது. தற்சமயம் இத்தகையோர், நிவாரணம்கோரி வழக்காடும் உரிமையைப் பெற்றுள்ளனர்.

''அரசாங்கத்தால் அண்மையில், தேசிய அரசுப் பேரவையில் தமக்கிருக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெருமான்மை வாக்குப்பலத்தால் சட்டமாக்கப்படவிருக்கும் தொழில் உறவுச்சட்டத்தை, வெள்ளை அறிக்கையில் உள்ளவாறு முழுயாக சட்டமாக்கினுல் அதன் விளைவுகள் மிகப்பாரதூரமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.''

## யாழ்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கி அவசியமான மருந்துகளைத் தருவிப்பதற்கும் எம். பி.க்கள் உறுதியளித்தனர்.

### ஏனைய குறைபாடுகள்

போதிய கட்டில்கள் இல்லாமை, இட வசதியின்மை போன்ற ஏனைய குறைபாடுகள் பற்றியும் கவனத்திற்குக் கொண்டுவந்து; ஆவனசெய்யுமாறு அரசைக் கோருவதென எம். பி க்கள் முடிவுசெய்துள்ளனர்.

இச் சந்திப்பின்போது வைத்திய அத்தியட்சகர் டாக்டர் உருத்திரா ராஜரெட்ணம் உட்பட பல ஆஸ்பத்திரி டாக்டர்களும் ஊழியர்களும் ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் பற்றி எம் பிக்களுக்கு விரிவாக எடுத்துவிளக்கினர்.

### யாழ் எம் பியின் முயற்சி

யாழ் அரசினர் ஆஸ்பத்திரியின் சீர்கேடுபற்றி இதற்கு முன்னரும் பலதடவை யாழ். எம். பி. யோகேஸ்வரன் அரசுக்கு தந்திகள் மூலமும், நேரடியாகவும் சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## இருபிரிவினர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுக்களில், யாழ் பொலிஸ் அதிபர் யாழ். எம். பி. ஆகியோரும் இன்று கலந்து கொள்வார்கள்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி; மோதல் இடம் பெற்றபகுதியில் மேலும் அசம்பாவிதம் எதுவும் நேற்றிரவு நிகழவில்லை என்றும் ஆயுதம் தாங்கிய பொலிசார் சம்பந்தப்பட்ட முழுப்பகுதியையும் காவல் காத்துவருகின்றனர் என்றும் பொலிஸ்தரப்பிலிருந்து தெரியவருகிறது.

## ''ஆசிரியதொழிலை தொண்டாகக் கருதவேண்டும்''

(வவுனியா)

''பாடசாலைகளில் வெறும் கல்வியை மட்டுமோ அல்லது பல கட்டிடங்களைக் கட்டினுலோ மட்டும் சமூகம் முன்னேறிவிடாது. ஒழுக்கஅடிப்படையிலேயே கல்விகற்பிக்க வேண்டும் அதற்கு ஆசிரியர்கள் தங்களுடைய வேலையை தொழிலெனக்கருதாதுதொண்டெனக்கருதி. செயல்பட்டால் தான் மாணவர்களை சிறந்த நல்லொழுக்கமுடையவர்களாக நற்பிரஜைகளாகமாற்ற முடியும்', என்று நொச்சிமோட்டை கனிஷ்ட வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறந்துவைத்துப்பேசிய வவுனியா பிரதம கல்வியதிகாரி திரு எம். இமியாம் பிள்ளை பிள்ளை கூறினுர்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. எம். சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் திரு. சிமியாம் பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கடந்த மார்கழி மாதத்தில் வன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவில் கிடைக்கப்பட்ட ரூபா 30 லட்சத்தில் கட்டிய பதினெரு பாடசாலைகளையும் ஒருமாதத்தில் கட்டி முடிக்க உதவிய அதிபர்களுக்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்திற்கும் பாராட்டுகிறேன்'' என்ருர். [உ]

## மாணவர்க்கு—

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

மூலம் மேற்கத்தைய நாடுகளில் மாணவர்கள் தமது கல்வி முடிந்ததும் பாடசாலையை விட்டு வெளியேறும் போது சிறந்த பண்ணையாளர்களாகவும் தொழில்அதிபர்களாகவும் வெளியேறுகின்றுர்கள். வெளிநாட்டில் தான் பெற்ற பயிற்சியையும் அனுபவத்தையும் பிரயோகித்து இங்கே மாட்டுப்பண்ணையை நிறுவியுள்ளது இந்நாட்டுப் பொருளாதாரத்துறையில் பாடசாலைகளும் பங்குகொள்ள வழிசெய்கின்றது.''

இத்திறப்புவிழா வைபவத்தில் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி, விவசாயக் கல்வி அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே இம் மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் கோழிப்பண்ணை மூலம் கிடைத்த வருமானத்தைச் சேமிப்புப் பத்திரங்களாக வித்தியாதிபதி மாணவர்களிடம் வழங்கினுர். (உ)

# 'இறைவன் புகழ் பாடுவதே எங்கள் இலட்சியம்'

## தமிழக பாடகி பேட்டி

(வெள்ளவத்தை)

''இறைவன்புகழ் பாடுவதே எங்களின் லட்சியமாகும். திரைப்படத்தில் பாடி பெயரும், புகழும் கிடைத்தாலும் கூட, இறைவனைப்பற்றி பாடும் பொழுதுதான் மனதிற்கு நிம்மதி கிடைக்கிறது'

இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பாடகி திருமதி எஸ். சரளா 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். திருமதி சரளா, தமது அருகில் அமிர்ந்திருந்த (வாத்தியக் கலைஞரான) தமது கணவர் திரு. அம்பிகுவாமிநாதனைசுட்டிக்காட்டி; 'இறைவனைப்பற்றியும், சைவ, கிறிஸ்தவ இஸ்லாமிய பாடல்களை பாடுவதும் எங்களின் லட்சியமாகும் எனது வெற்றிக்கு என் கணவர் உறுதுணையாகவிருக்கிருர். எனது கணவர் இசைக் கலைஞர். இசையமைப்பாளர் திரு விஸ்வநாதன் குழுவில் வாத்தியக் கலைஞராக பணியாற்றுகிருர்' என்று கூறினுர்.

இந்தியாவில் பல புண்ணிய ஸ்தலங்களில் கச்சேரி நடத்தியுள்ளோம். இலங்கைக்கு வருகை தந்ததும் அதே நோக்கத்திற்காகவேதான் இங்குள்ளவர்களின் விருந்தோம்பல் எங்களை பெரிதும் கவர்ந்துள்ளது. கலைஞர்களை வரவேற்று உபசரிப்பதில் இலங்கையர்கள் முன்னணியிலிருக்கிருர். நாங்கள் போகுமிடமெல்லாம் எங்களுக்கு நல்ல வரவேற்பு தந்தார்கள். தேன் மழை, கண்காட்சி, ஏன் போன்ற பல படங்களில் பாடியிருக்கிறேன். சிந்தனையில் மேடைக்கட்டி, சந்தனை ஆடவைப்பேன்' என்ற பாடல் எனக்கு பெரும்புகழைத்தேடிதந்தது. இலங்கையில் தமிழ் சிங்கள திரைப் படங்களில் வாய்ப்புதந்தால் பாட தயாராக இருக்கிறேன். இலங்கை வானொலியில்கூட பக்திப் பாடல்களை பாடியிருக்கிறேன். எனது இஸ்லாமிய பாடல்களையே பெரிதும் விரும்புகிருர்கள் இங்கு தமிழ்த் திரைப்படங்களுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. மக்கள் திலகம் எம். ஜி. ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் படங்களையே இங்குள்ள ரசிகர்கள் பெரிதும் விரும்புகிருர்கள்.''

இவ்வாறு பாடகி திருமதி எஸ். சரளா தமது கருத்தை நமது நிருபரிடம் தெரிவித்தார்

## உள்ளூராட்சிமன்ற தேர்தல்: இ.தொ.கா.போட்டியிடும்

(வெள்ளவத்தை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரிவு இவ்வருடத்தில் செப்டம்பரில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய செயல் திட்டங்களை உருவாக்கிவருகிறது.

கொழும்பு உள்ளூராட்சி மன்றத் தொகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழ்வதாலும் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற வன்செயல்களுக்குப் பிறகு அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டதாலும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இ. தொ. காங்கிரஸ் முன்வந்துள்ளது என்று இ தொ கா வைச் சேர்ந்த அரசியல் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1978-ம் ஆண்டு [illegible] மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Srilanka